ஆ. உரைப்பகுதியில் 'இரண்டையும்' என்பது எவற்றைக் குறிக்கிறது?

இ. மனித இனப் பரிணாம வளர்ச்சியின் சிறப்புகளுள் ஒன்று ______.

## பகுதி – V

**விடை எழுதுக.** 1x6=6

30. அ. விடுப்பு விண்ணப்பம் எழுதுக.

(அல்லது)

ஆ. 'இயற்கையைக் காப்போம்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

## பகுதி – VI

**விடை எழுதுக.** 2x6=12

31. அ. உங்களுக்கென ஓர் எந்திரமனிதன் இருந்தால் அதை எதற்கெல்லாம் பயன்படுத்துவீர்கள் எனச் சிந்தித்து எழுதுக.

(அல்லது)

ஆ. தமிழ்மொழி படிக்கவும் எழுதவும் எளியது என்பது பற்றி உங்கள் கருத்து யாது?

32. அ. 'கிழவனும் கடலும்' என்னும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாக எழுதுக.

(அல்லது)

ஆ. அத்தையின் கடிதக் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.



# முதல் பருவத்தேர்வு – 2024

# தொகுத்தறி மதிப்பீடு – தமிழ்

**C**

**வகுப்பு – 6** **மதிப்பெண்கள் : 60**

**காலம் : 2.00 மணி**

## பகுதி – I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 8x1=8

1. உடல் நோய்க்கு ______ தேவை.
   அ. ஔடதம் ஆ. இனிப்பு இ. உணவு ஈ. உடை
2. 'வேதியுரங்கள்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______.
   அ. வேதி + யுரங்கள் ஆ. வேதி + உரங்கள்
   இ. வேத் + உரங்கள் ஈ. வேதியு + ரங்கள்
3. கபிலர் என்ற பெயருக்கான மாத்திரை அளவு ______.
   அ. 3½ ஆ. 3 இ. 4 ஈ. 2½
4. அன்பிலார் ______ தமக்குரியர்.
   அ. பொய்ப்பின் ஆ. செய்வார் இ. வழியது ஈ. எல்லாம்
5. முத்து தம் ______ காரணமாக ஊருக்குச் சென்றார்.
   அ. பனி ஆ. பணி இ. உரை ஈ. உறை
6. 'தனிநிலை' என்ற வேறு பெயராலும் அழைக்கப்படுவது ______.
   அ. ஆய்தம் ஆ. உயிர் எழுத்து
   இ. மெய் எழுத்து ஈ. உயிர்மெய்
7. சரியான வரிசையில் சொற்கள் அமைந்துள்ள தொடரைத் தேர்ந்தெடுக்க.
   அ. இளங்கோவடிகள் காப்பியத்தை என்னும் இயற்றியவர் சிலப்பதிகாரம்.
   ஆ. பறவைகள் இல்லாத உலகில் மனிதன் வாழ முடியாது.
   இ. மிகப்பெரிய சாண்டியாகோ மீனைப் பிடித்தார்.
   ஈ. மனிதர் இந்தியாவின் டாக்டர் சலீம் அலி பறவை.
8. 'நீக்குதல்' என்னும் சொல்லின் எதிர்ச்சொல் ______.
   அ. போக்குதல் ஆ. தள்ளுதல்
   இ. அழித்தல் ஈ. சேர்த்தல்



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி – II – பிரிவு–1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.** 4x2=8

9. அன்பிலார், அன்புடையார் செயல்கள் யாவை?

10. பறவைகள் எக்காரணங்களுக்காக இடம் பெயர்கின்றன?

11. நீங்கள் அறிந்த தமிழ்க் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.

12. தமிழ் மொழியின் செயல்களாகக் கவிஞர் கூறுவன யாவை?

13. நாளைய மனிதனின் வாழ்வு எவ்வாறு இருக்கும்?

14. 'இனிய உளவாக இன்னாத கூறல்' – இவ்வரியில் 'இனிமை இல்லாது பேசுதல்' என்ற பொருள் தரும் சொற்கள் எவை?

### பிரிவு–2

**எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.** 6x2=12

15. தமிழ் எழுத்துகளுக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.

16. அறிவியல் கருவிகளைப் பயன்படுத்துவதில் உங்கள் பொறுப்பினை எழுதுக.

17. 'தமிழ்மொழிச் சொற்கள் ஒலிக்க எளிதானவை' – இந்தத் தொடரின் மொழி முதலில் இடம்பெற்றுள்ள எழுத்துகளை எழுதுக.

18. கலைச்சொல் எழுதுக. அ. Sanctuary ஆ. App

19. 'தெளி' என்ற அடிச்சொல்லுடன் எழுத்துகளைச் சேர்த்துப் புதிய சொற்கள் இரண்டனை உருவாக்குக.

20. பொருத்தமான சொற்களைக் கொண்டு நிரப்புக.

    செயற்கரிய செய்வார் ____________ சிறியர்

    செயற்கரிய ____________ தார்.

21. பல நாள்களாக மழை பெய்யாததால் பயிர்கள் வாடின. இத்தொடரைப் பிரித்து இரண்டு தொடர்களாக எழுதுக.



22. முதல் எழுத்தில் தொடங்கும் சொற்கள் இரண்டனை எழுதுக.

## பகுதி – III

**அடிபிறழாமல் எழுதுக.** 2+3=5

23. 'பிறர்க்கு' என முடியும் திருக்குறள்.

24. அ. 'தமிழுக்கு நிலவென்று' எனத் தொடங்கி 'நிருமித்த ஊர்' என முடியும் இன்பத்தமிழ் பாடல்.

(அல்லது)

ஆ. 'மாமழை போற்றுதும்' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

## பகுதி– IV

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.** 3x3=9

25. தமிழ் இனிய மொழி என்பதற்கான காரணம் தருக.

26. காணிநிலம் பாடலில் பாரதியார் வேண்டுவன யாவை?

27. எந்திரமனிதனின் பயன்களை விளக்குக.

28. 'இனியவை கூறல்' என்ற அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறட்பாக்களின் கருத்துகளை எழுதுக.

29. **உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

மனித இனப் பரிணாம வளர்ச்சியின் சிறப்புகளுள் ஒன்று மொழி. மனிதரைப் பிற உயிரினங்களிடம் இருந்து வேறுபடுத்தியும் மேம்படுத்தியும் காட்டுவது மொழி. மொழி, நாம் சிந்திக்க உதவுகிறது; சிந்தித்ததை வெளிப்படுத்தவும் உதவுகிறது. பிறர் கருத்தை நாம் அறிய உதவுவதும் மொழியே. உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன. இவற்றுள் சில மொழிகள் மட்டுமே பேச்சு வடிவம், எழுத்து வடிவம் ஆகிய இரண்டையும் பெற்றுள்ளன.

அ. மொழி எதற்கு உதவுகிறது?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com